DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

CC.No. 241/2016

Deposition of witness for PW. 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | முனியராஜ் | சாதி | .. | |
| த.பெ | .. | பெரியசாமி | சமயம் | .. | |
| கிராமம் | .. | கம்மாபட்டி | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 12.11.2018.

மு.வி -

நான் கம்மாபட்டியில் குடியிருந்து வருகிறேன். தீப்பெட்டி ஏஜெண்டாக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு வேலையை முடித்து விட்டு காலை 11.00 மணியளவில் நானும் பாஸ்கர் என்பவரும் பொன்னாங்கன்னி கண்மாய் அருகில் வந்தபோது போலிசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். அதனால் மேற்படி கையெழுத்தை நான் போட்டுக்கொடுத்தேன். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

போலிசார் விசாரணையின்போது 20.09.2014ந்தேதி காலை 11.00 மணிக்கு போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தபோது நானும் பாஸ்கர் என்பவரும் உடன் இருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளதாக வாக்குமூலம் கூறிவிட்டு தற்போது எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பிறழ்ந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி -இல்லை

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

CC.No. 241/2016

Deposition of witness for PW. 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | பாஸ்கரன் | சாதி | .. | |
| த.பெ | .. | சித்திரைகனி | சமயம் | .. | |
| கிராமம் | .. | கம்மாபட்டி | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 12.11.2018.

மு.வி -

நான் கம்மாபட்டியில் குடியிருந்து வருகிறேன். மிட்டாய் வியாபாரம் பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு செப்டம்பர் மாதம் 20ம் தேதி நானும் முனியராஜ் என்பவரும் காலை சுமார் 11.00 மணியளவில் பொன்னாங்கன்னி கண்மாய் அருகில் வந்தபோது போலிசார் செயின் அத்து போனது சம்பந்தமாக எங்களுக்கு தெரியுமா என்று விசாரித்தார்கள். தெரியாது என்றுசொன்னோம். அப்போது போலிசார் அங்கு வரைபடம் வரைந்து என்னிடமும், முனியராஜிடம் கையெழுத்து கேட்டார்கள். அதனால் மேற்படி கையெழுத்தை நான் போட்டுக்கொடுத்தேன். பார்வைமகசர் அசாஆ.3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி - பொதுவாக காலை 9 மணிக்கு மிட்டாய் வியாபாரத்திற்கு போய்விட்டு 11 மணிக்கு வீட்டிற்கு வருவேன். அதன்பிறகு மாலை 4 மணிக்கு போய்விட்டு இரவு 10 மணிக்கு வீட்டிற்கு வருவேன். நான் காவல்நிலையத்திற்கு போகவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு முழுமையாக தெரியாது. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு சம்பவயிடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.